Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.234/2025

Dated 21-01-2026
Deposition of witness for : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மோகன் | வயது | : | 31 |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணி | தாலுக்கா | : | ராசிபுரம் |
| கிராமம் | : | ஆர்.பி காட்டுர் | தொழில் | : | இரண்டாம்நிலை காவலர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent 355 BNSS Petition filed and allowed.**

**Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருவையாறு காவல்நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 19.10.2024 அன்று காலை 7.00 மணிக்கு கண்டியூர்- விளாங்குடி மெயின்ரோட்டில் நானும் அ.சா.1ம் ரோந்து பணியில் இருந்தபோது கஸ்துரிபாய் நகர் அருகில் கார்த்தி என்பவர் கையில் அருவாளை வைத்துக்கொண்டு பொதுமக்களுக்குஅச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்து அவர் எங்களிடம் சொல்லி நானும்

மற்றொரு இரண்டாம்நிலை காவலர் அ.சா.1ம் கஸ்தூரி பாய் நகருக்கு சென்றோம். அங்கு கார்த்தி என்பவர் கையில் வாளை வைத்துக்கொண்டு போவோர் வருவேரை மிரட்டி கெட்டவார்த்தைகள் சொல்லி திட்டிகொண்டிருந்தார். போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தினார்.

2) நாங்கள் அவர் அருகில்போக முயற்சித்தபோது அவர் எங்களை பார்த்து அருகில் வந்தால் உங்களையும் வெட்டுவேன் என்று அருவாளை காட்டி மிரட்னார். நாங்கள் அவரை மடக்கி பிடித்து கையில் இருந்த வாளை பிடிங்கினோம். அப்போது அந்த இடத்திற்கு பெண் உதவி ஆய்வாளர் வந்துவிட்டார். நாங்கள் எல்லோரும் அவரை பிடித்து காலை 9.15 மணிக்கு காவல்நிலையம் கொண்டு வந்தோம். அந்த வாள்தான் அ.சா.பொ.1 ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. முதல் கையெழுத்து காவலர் அ.சா.1ன் கையெழுத்து .

3) உதவி ஆய்வாளர் அவர் வழக்கு பதிவு செய்தார். என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) சொல்லக்கூடிய சம்பவ இடத்தில் கடைகள் திறந்து இருந்தன. ஒரு பெட்டிக்கடை திறந்து இருந்தது. ஆனால் அந்த கடையில் ஆள் இருந்தார்களா என்று கவனிக்கவில்லை.

2) முன் விசாரணையில் சொன்ன நிகழ்வு 1-1/2 மணி நேரம் நடந்தது. சம்பவ இடமான ரோடு மெயின்ரோடு ஆகும்.

3) அந்த மெயின் ரோட்டில் அந்த சமயத்தில் ஆட்கள் போய் கொண்டு வந்துகொண்டும்

இருந்தார்கள். அவ்வாறு போய் வந்தவர்களை உதவி ஆய்வாளர் யாரையாவது சாட்சியாக அழைத்தாரா என்றால் அழைக்கவில்லை.

4) நான் முன் விசாரணையில் சொன்னதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் எதிரி அங்கு இல்லை என்றும் வீட்டில் இருந்த எதிரியை காவல்நிலையம் அழைத்து வந்து அவர் மீது பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அவரிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

5) சம்பவ இடத்திற்கு நான் மற்றும் அ.சா.1, உதவி ஆய்வாளர் ஆகியோர் ஒன்றாக ரோந்தில் இருக்கும்போதுதான் தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்கு சென்றோம்.

6) உதவி ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும் நானும் அ.சா.1ம் ஒரு இரு சக்கர வாகனத்திலும் சென்றோம்.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்